<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>

அ.சா. 3 தேதி.19.12.2024

| SC. No. | 24/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | காமராஜ் | த/பெ. | கோபால் |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(1,2 எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் தெற்குதெரு மலப்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு கணேசனை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான் கையெழுத்து மட்டும் தான் போட்டேன். அதை எங்கு போட்டேன் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 27.06.2021 அன்று காலை 06.30 மணிக்கு நானும் எங்கள் தெருவை சேர்ந்த கணேசன் என்பவரும் எங்கள் தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற வழக்கு எண். 1481/2021 என்ற வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தில் சாட்சிகளாக என்னையும், கணேசனையும் வைத்துக் கொண்டு ஒரு மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்தார்கள். அதில் சாட்சிகளாக நானும், கணேசனும் கையொப்பம் போட்டுவிட்டு தற்போது எதிரிகள் வேண்டியவர்கள் என்பதால் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>

அ.சா.4 தேதி.19.12.2024

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 24/2023 | | |
| பெயர் | கல்யாணசுந்தரம் | த/பெ. | குஞ்சு |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(1,2 எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மூங்கில்தோட்டம் கன்னித்தோப்பு தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். எங்கள் தெருவை சேர்ந்த சம்பந்தம் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.3. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.4. சுமார் ஆறு ஏழு மாதத்திற்கு முன்பு நான் வேலை செய்யும் இடத்தில் போலிசார் வந்து ஒரு கையொப்பம் கேட்டதற்கு இணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன். எதற்கு என்று போலிசார் என்னிடம் கூறவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 27.06.2021 அன்று காலை 12.30 மணிக்கு எங்கள் தெருவை சேர்ந்த சம்பந்தமும் நானும் வீட்டிற்கு செல்வதற்காக மூங்கில்தோட்டம் பஸ் ஸ்டாப் அருகில் வந்து கொண்டிருக்கும்போது மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற வழக்கு எண், 1481/2021 வழக்கு சம்பந்தமாக எதிரி ரித்தீஷ் என்பவரை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது எங்கள் இருவரை சாட்சியாக வைத்து எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் சாட்சிகளாக நானும் சம்மந்தமும் கையெழுத்து போட்டோம் என்றும் பின்பு எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி பகல் 14.15 மணிக்கு எதிரி வீட்டு கொள்ளை புறத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய தடயப்பொருட்களான செங்கல் மற்றும் கட்டையை போலிசாரிடம் எங்கள் முன்னிலையில் ஆஜர்

படுத்தினார்கள் என்றும் அதை போலிசார் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள் என்றும் அந்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளாக நானும் சம்மந்தமும் கையொப்பம் இட்டோம் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி வேண்டியவர் என்பதால் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.